# 4
# குலத்தில் குரங்கு

## காட்சி-1

**[திருமண நினைவு]**

*சொக்கம்மா:* அத்தான், கண்ணாட்டம் ஒண்ணு, பெத்தாதானா புள்ளே?

*சிக்கண்ணன்:* என்ன சொல்றே? வெளங்கலையே!

*சொக்:* நமக்கு வயது வந்ததும், கண்ணாலம் எப்போ பண்ணுவாங்கண்ணு நெனச்சயா நெனைக்கிலையா? அந்த மாதிரிதானே இருக்கும்! புள்ளைக்கிப் புள்ளையாதானே வளக்கறோம்?

*சிக்:* அப்டி சொல்லேன். கண்ணாலம் பண்ணிட்டா போவுது.

*சொக்:* அது எப்படி முடியும்?

*சிக்:* அதுக்கு மேலே பேசாதே. முடியும், அதுவும் நாலு நாளிலே! போ, வேலையே பாரு.

[நான்கு நாட்களுக்குப் பின்]

## காட்சி-2

**[பந்தலில் பரியம்]**

*உறவினர் 1:* மணி ரெண்டு அடிச்சுட்டுது, இன்னம் ஒரு மணி நேரத்லே ஆவணும். உம், உம்! முழித்துக் கொள்ளுங்க. நீ பட்டி கட்டு; பூவை பந்து சுத்து!

*உறவினர் 2: வாத்தியக்காரன் வந்தானா? தெருப் பந்தல்லே வாழை மரம் இன்னுமா கட்டலே? பரியச் சடங்கு தொவக்ற சமயம்! ஆவட்டும்!*

ஒருபுறம்

*சொக்: ஏன் அத்தான்? காப்புத்தான் இருக்கு; கொலுசு, சங்கிலி, தோப்பு நெல்லிக்கா தொங்கலு இதெல் லாம் இல்லையே. பரியத்திலே பொண்ணு வூட்டுக்காரர் கேப்பாங்களே!*

*சிக்: நீ சும்மா இரு. இப்ப ஒனக்கு ஒண்ணும் தெரி யாது வெளக்கு ஏத்தியாச்சி. அதோ பாப்பானும் வந்து விட்டான். பொண்ணூட்டுக்காரர் வர்ற சமயம்! என்னே ஒண்ணும் கேக்காதே! நடக்க நடக்க பாரு!*

*[விடிய மூன்று மணி. பரியக் கூட்டம் கூடியது]*

## காட்சி-3

## [பரியச் சண்டை]

*சிக்: வாங்க சம்மந்தி! வாங்க பொண்ணூட்டுக் காரரே! ஒக்காருங்க.*

*பெண் தகப்: அவரு ஆரு? மாப்பிள்ளைக்கி தகப்ப னாரா? ஓகோ வாங்க. இவுங்க ஆரு? மாப்பிள்ளைக்கி சித்தப்பாவா? ஓகோ வாங்க, எல்லோரும் வந்துட்டாங் களா? வந்துட்டாங்க! தொவக்க வேண்டியது தானே ஐயரே.*

*ஐயர்: ஆஹா! சுக்கலாம் பரதரம்.....*

*[ஒருபுறம்]*

*பெண் தகப்: சொன்னடி நகை! இஹி...ஹி.*

*சிக்: ஐயா! நானு! மாப்பிள்ளையை பெத்தவனல்ல, வளர்த்தவன். எனக்கும் இந்தக் கண்ணாலத்துக்கும் தொந் தார்த்தம் கெடையாது. கெடையாதின்னாலும் நாந்தான் மாப்பிள்ளையைப் பத்தி உத்தரவாதம்! ஏன்னா, நான்தான்*

ஒங்களெ அறிவேன். நான்தான் பொண்ணே வந்து கேட்டு முடிவு பண்ணனேன். நீங்க நல்லா கேளுங்க. கேட்க வேண்டியதே கேளுங்க. ஏம்பா மாப்பிள்ளையைப் பெத்தவனே! ஒன்னெதாம்பா சிங்கேரியப்பா, ஒன்னெதாம்பா. என்னமோ கேக்றாரே பொண்ணெ பெத்தவரு.

சிங்கேரி: சரிதாங்க! ஆயிரம் பேருக்குமுன்னே— ஆயிரத்துக்கு மேலே இருக்கும்—தோ வந்திருக்காங்க சொல்றேன். இப்போ வேலை தீந்து கைக்கு வந்தது காப்பு மட்டுந்தானுங்க. கொலுசு, சங்கிலி, தோப்பு நெல்லிக்கா தொங்கலு இதெல்லாம் வேலை முடியிலே. இருக்கிறதே கொண்டு பரியத்தே முடியுங்க.

பெண் தகப்: பரபரப்பா வேலை நடக்குது— பந்தலிலே பரியம் வைச்சிருக்கிங்க இன்னிங்க. இன்னம் வேலை முடியலே, நகை பின்னால் ஆவுட்டும் இண்றிங்க, இப்ப; இதென்ன எழவா இருக்கே.

சிங்கேரி: ஓய்! நல்ல வேளையிலே எழவு கிழவுண்ணாதே, மூதேவியாட்டம்.

பெண் தகப்: மூதேவியாட்டமா இருக்றேன்? ஊஹூம் அப்படியா? சொன்னபடி நகையெல்லாம் வைக்றியா, இல்லியா?

சிங்கேரி: என்னங்காணும் பனாதித் தனமா பேறே. எங்கே பூடும்?

பெண் தகப்: சீச்சீ! ஆருடா பனாதி, மடையா?

சிங்கேரி: பல்லு ஒடைஞ்சிபுடும்? ஒடைஞ்சுபுடுண்ணா ஒடைஞ்சு பூடும்.

பெண் தகப்: போடா! கையாயை நீட்றே! (ஓர் அறை கொடுக்கிறான்.)

சிங்கேரி: ஆஹாங் (பதில் அறை)

சிக்கண்ணன்: (இருவரையும் நீக்கி நடுவில் அமர்ந்து) ஏம்பா சிங்கேரி! இதுதான் மரியாதையா? அடிக்றதா? என்னே அடிச்சா என்னா அவரே அடிச்சா என்னா? இதெல்லாம் யாருக்கடா அவுமானம்? ஏண்டா, இதே நேரத்திலே இதே பந்தலிலே இதே பொண்ணுக்கு மாப்ளே பாத்து தாலி கட்ட என்னாலே முடியுண்டா.

பெண் தகப்: அப்படிதான் செய்யுங்க.

சிக்: தங்க தேர் மாதிரி கொண்டாருவண்டா மாப்ளே

பெண் தகப்: அவன் கிடக்கறாங்க. நீங்க அப்படியே முயற்சி எடுங்க இப்பவே.

சிக்கண்: ஏம் பொண்ணுண்ணா வேறே; அவரு பொண்ணுண்ணா வேறெண்ணு நினைக்கலேடா நானு...

பெண் தகப்: நேரமாவுதுங்க எனக்கு. வந்த அவுமானத்தே காப்பாத்துங்க. மாப்பிளே எங்கேங்க?

சிக்: அவருக்கு வந்த அவுமானம் எனக்கல்லவா? மடையா, மடையா (அடிக்கப் போகிறான்; பெண்ணின் தகப்பன் மறிக்கிறான்) இதோ போறேண்டா (பெண் தகப்பனை நோக்கி) இருங்க இங்கியே! தோ வந்துட்டேன். நீங்க பயப்படாதீங்க. இதே நேரத்திலே, முடிச்சுடறேன்— ஆஹா நூறு பங்கிலியும் (போகிறான். பெண் தகப்பன், ஒரு புறமாகத் தங்கிச் சிக்கண்ணனை எதிர்பார்த்திருக்கிறான்.)

## காட்சி-4

## [ஒங்களே நம்புறேன்]

[சிக்கண்ணனும் பெண்ணின் தகப்பனும் தனித்துப் பேசுகிறார்கள்]

சிக்கண்: ஒயர்ந்த எடம். ஏற்பாடு பண்ணிட்டேன்.

பெண் தகப்: கொலம்?

சிக்கண்: ஒறவுங்க எனக்கு.

பெண் தகப்: வசதி?

சிக்கண்: இப்ப அடிச்சானே ஒரே அடி லட்ச ரூபாய். கள்ள மார்க்கட்டிலே ஜவுளிக் கடை.

பெண் தகப்: கண்ணுக்குப் புடிச்சாப்லே இருக்கறான் னேன்.

சிக்கண்: கொலத்லே?

பெண் தகப்: கொரங்கெ கொள்ளலாம். அது சரி தான்; கேட்டேன்.

சிக்கண்: எனக்குப் புடிக்குதுங்க! உட்டுடுங்க, அதோட.

பெண் தகப்: பரியம்?

க்கண்: அதெல்லாம் இப்ப வாயெ திறக்கப் படாது. ஏன் இண்ணு கேளுங்க. அவுங்கப்பா அம்மா ஊர்லே இல்லே. வந்தா வயிரமா எழச்சிடுவாங்க. நம்புங்க என்னே.

பெண் தகப்: அடியோட நம்பறேன்.

சிக்கண்: என்னா யோசிக்கறேண்ணா பையன் அரசூர் ஜமீன்தார்கூட! கார்லே திருவண்ணாமலைக்குப் போய் வந்தான். குளிர்காச்சலா இருக்கிறான். கண்ணாலத்தே நாளைக்கி வைச்சிக்கலாண்ணா, மத்தியிலே புகுந்து அவன் மனசே கலைச்சிபுடுவாங்க. வேறே பொண்ணுக்கு ஒடைய வங்க.

பெண் தகப்: இப்பவே முடிச்சிபுடுங்க.

சிக்கண்: சரி! இப்பவே குசும்புது. வேறே பொண் ணூட்டுக்காரர் ஆளெ அனுப்பி வைக்கறாங்க அவங்கிட்டே! நேரமில்லே! ஆவட்டும் ஐயரே, ஆவட்டும்.

[ஐயர் தொடங்கினார் சடங்கை]

## காட்சி-5

**[தோஷமில்லேண்ணேன்]**

ஐயர்: பொண்ணு மாப்ளயே அழைச்சுண்டு வர்ரது.

சிக்கண்: பொண்ணு மாத்திரம் வரட்டும் முன்னே! தாலி கட்றபோது மாப்ளெ வர்லாமில்லே?

ஐயர்: தோஷமில்லேண்ணேன்.

பெண் தகப்: முகூர்த்த நேரம் தவறிட்டுதே

ஐயர்: தோஷமில்லேண்ணேன்.

பெண் தகப்: தாலி இல்லே. மஞ்சளை சரட்லே கட்டிக்கலாமா?

ஐயர்: தோஷமில்லேண்ணேன்! மாப்ளையெ இட்டு வரலாம்.

சிக்கண்: இதோ வர்ராரே

*[மாப்பிள்ளைக்கு உச்சி முதல் உள்ளங்கால் வரைக்கும் மறையப் போர்வையிட்டு, நான்கு பேர் கையால் தாங்கி வந்து மணவறையில் உட்காரவைக்கிறார்கள்]*

ஐயர்: வாத்யம்! வாத்யம்!

*[மாப்பிள்ளை தாலி கட்டுவது போலவே வேறு கைகள் பெண் கழுத்தில் தாலி கட்டுகின்றன.]*

சிக்கண்: பொண்ணு மாப்ளே போகலாமில்லே?

ஐயர்: தோஷமில்லேண்ணேன்!

சிக்கண்: மாப்ளே மாத்திரம் முன்னே எழுந்து போவலாமா?

ஐயர்: தோஷமில்லேண்ணேன்.

சிக்கண்: ஏன் ஐயரே! இதுக்கு தட்சணை கொடுக்கா விட்டால்?

ஐயர்: தோஷண்ணேன்.

[மாப்பிள்ளை முன்போலவே நால்வரால் அழைத்துச் செல்லப்படுகிறான்.]

**காட்சி-6**

**[மறுநாள்]**

[திருமணம் நடந்த மறுநாள் காலை சிக்கண்ணன் கூடத்தில் மிகக் கருத்தாகக் கணக்கு எழுதிக் கொண்டும் வாயால் உரத்த குரலில் எண்களை கூட்டிக் கொண்டும் இருக்கிறான். பெண் தந்தையும், தாயும் சிக்கண்ணனை பார்க்க வருகிறார்கள். வாயில் காப்போன் மறிக்கிறான்.]

வாயில் காப்போன்: இப்ப அவரெ நீங்க பார்க்க முடியாது.

பெண் தகப்: ஏன்?

வாயில் காப்: அவரு கணக்குப் பாக்கறாரு.

பெண் தகப்: நாங்க வந்திருக்கிறோம்னு சொல்லு.

வாயில் காப்: சரி. (போகிறான்; திரும்பி வந்து கூறுகிறான்) போங்க! ஆனா ஒண்ணுங்க. பன்னிப் பன்னி பேசாதிங்க. அவர்கிட்டே ஒரு கேழ்வி— அதுக்கு அவரு ஒரே பதில்! அதுக்கு மேலே ஏடிச்சி ஏடிச்சி கேக்கக் கூடாது. சம்மதமா?

பெண் தகப்: ஐயோ! அப்படியா? சரி.

[உள்ளே போகிறார்கள். சிக்கண்ணனைப் பார்த்தபடி நிற்கிறார்கள்.]

சிக்கண்: (கணக்குச் சுவடியைப் பார்த்துக் கொண்டு) ஏழரையும் மூணும் பத்தரை; பத்தரையும் ஒண்ணும் பதினொண்ணரை....

பெண் தகப்: நிக்றோமே?

சிக்கண்: ஒக்காருங்க! பதினெட்டரையும் மூணே காலும் இரவத்தொண்ணே முக்கா. இரவத் தொண்ணே முக்கா, இரவத்தொண்ணே முக்கா. இரவத்தொண்ணே முக்காலும்.....

[பெண்ணின் தாயும் தகப்பனும் எதிரில் உட்காருகிறார்கள்.]

பெண் தகப்: அப்புறம் கணக்குக் கூட்டுங்களேன்.

சிக்கண்: அது முடியாது. ஐம்பத்தி ஆறேகால். ஐம்பத்தி ஆறேகால். ஐம்பத்தி ஆறரையும் மூணரையும் அறுவது....

பெண் தகப்: மாப்பிள்ளையை இன்னம் நாங்க பார்க்கவேயில்லேங்க.

சிக்கண்: நம்பள்ளே மாப்பிளையை பாத்தாகண்ணாலம் பண்றாங்க. நூத்திப்பதனேழரையும் காலும் நூத்திப் பதனேழேமுக்காக. நூத்திப் பதினேழே முக்காலும் அரையும் நூத்திப் பதினேட்டே கால்....

பெண் தகப்: ராத்ரி மூணுமணி முகூர்த்தமா பூட்டதுலே...

சிக்கண்: நம்பள்ளே எல்லாரும் பகல்லேதானா முகூர்த்தம் பண்றாங்க! இருநூத்திப் பதினஞ்சு. இருநூத்திப் பதினஞ்சு. இருநூத்தி.....

பெண் தகப்: பொண்ணு மாப்ளையைக் கூட்டிப் போவணுமே?

சிக்கண்: போறதுதானே! ரூபாய் நானூத்தி நாப்பத்தஞ்சியும் காலே அரைக் காலும்! அப்றம் மூணே கால், மூணே கால், மூணே காலும் ஒண்ணும்....

பெண் தகப்: கூப்டுங்க மாப்ளயே....

சிக்கண்: மாப்ளையே கூப்பிட்றா காவக்காரா. நாலே வீசம்; நாலே வீசம்; நாலே வீசமும் நாலரைக்கால்...

[அங்கிருந்த காவற்காரன் உள்ளே செல்கிறான். உள்ளேயிருந்து காவற்காரனும் ஆளில் முக்கால் பங்கு உயரமுள்ள ஒரு வாலில்லாக் குரங்கும் வெளிவருவதைப் பெண்ணின் தந்தையும் தாயும் பார்த்து அஞ்சுகிறார்கள்.]

பெண் தகப்: என்னங்க, மாப்ளையெ கூப்டச் சொன்னா?

சிக்கண்: பின்னென்ன தென்னம்புள்ளையா நிற்பது? அஞ்சே அரை வீசம், அஞ்சே அரைவீசம், அஞ்சே அரை வீசமும் காவீசமும் அஞ்சே முக்காவீசம்....

பெண் தகப்: ஐயையோ....

பெண் தாய்: இது என்ன மோசம்?

பெண் தகப்: என்னயா...வெள்ளாட்றிங்களா?

சிக்கண்: வெள்ளாடுமில்லே கறுப்பாடுமில்லே...ஆறு! ஆறு! ஆறும் வீசமும் ஆறேகா வீசமும்.....

பெண் தகப்: தாலி கட்னது யாரைய்யா?

சிக்கண்: கண்ணா தெரியிலே! தங்கத் தேராட்டம் புள்ளே எதிர்லே நிக்றானே! ஆறே அரை வீசமும் காவீச மும் ஆறே முக்கா வீசம்....

பெண் தகப்: மனுஷனா இது? ஏன்யா?

சிக்கண்: எப்படி தெரியுது ஒங்களுக்கு? ஆறே முக்கா வீசமும் காவீசமும் ஆறேகால்.....

பெண் தகப்: என்னய்யா! கொரங்கையா இது!

சிக்கண்: நம்பள்ளே எல்லோரும் அழகாவா இருந்துட்றாங்க? ஆறேகாலும் காவீசமும் ஆறேகாலே வீசம்...

பெண் தகப்: அழகில்லாவிட்டால் போகிறது; கொரங்கில்லவோ.....

சிக்கண்: பன்னிப் பன்னி பேசறிங்க! ஆறேகாலே வீசமும் காவீசமும் ஆறேகாலே அரை வீசம்.....

[இதற்கிடையில் காவற்காரன் பெண் தகப்பனைப் பார்த்து அதட்டுகிறான்.]

காவற்: நான்தான் சொன்னேனே ஒரு கேழ்வி. அதற்கு ஒரே பதில்! அவ்வளவுதான்! பெரிய எடத்லே வந்து தொந்தரவு பண்ணாதீங்க, எழுந்திருங்க.

பெண் தகப்: பெரிய இடமா இது?

பெண் தாய்: எங்கே அடுக்கும் இந்த அக்குறும்பு? ஏம் பொண்ணு எங்கே? அம்மா கீரைமணி!

[தன் மகளின் பெயரைச் சொல்லி அழைக்கிறாள் தாய், உள்ளே இருந்து கீரைமணி ஓடிவந்து குரங்கைப் பார்த்து நடுங்கி உள்ளே ஓடுகிறாள். மகளின் பின்னால் தாய் ஓடுகிறாள்.]

[ஒரு புறம்]

தாய்: எங்கே அம்மா உன் நகையெல்லாம்?

கீரைமணி: அத்தை கயிட்டி வெச்சிகினாங்க. நீ ஆம்படையாங்கூட ஒத்துக் குடுத்தனம் பண்றதா இருந்தா குடுப்பேன். ஒங்க ஆத்தா வூட்டுக்குப் போறதா இருந்தா குடுக்க மாட்டேண்ணாங்க. அங்கே நிண்ணுதே, அது கொரங்குதானேம்மா. அது என்ன அவ்வளவு ஒசரமா இருந்துதே.

தாய்: அதுதாண்டி மவளே மாப்பிள்ளையாம்!

கீரைமணி: ஊஹூம்.

[முகத்தைக் கையால் மூடிக்கொண்டு அழுகிறாள் கீரைமணி.]

## காட்சி-7

### [ஒத்துக் குடித்தனம் பண்ணலாம்]

[பெண்ணின் தாயும் தகப்பனும் நெஞ்சத் துடிப்புடன் தெருவில் வந்து கூச்சலிடுகிறார்கள். வழியிற் போய்க் கொண்டிருந்த ஒருவர் நிற்கிறார்.]

வழிப்போக்: என்ன அது?

பெண் தாய்: ஏம் பொண்ணுக்கு ஒரு கொரங்கைக் கட்டிவைச்சிட்டாங்க ஐயா! பொண்ணேயாவது அனுப்புங்க இண்ணா, நாங்க போட்ட நகையெல்லாம் கயிட்டினு அனுப்புவாங்களாம். அல்லாட்டி அந்த குரங்குகூட ஒத்துக் குடித்தனம் பண்ணுமாம்.

வழிப்போக்: ஊம்....கெடக்கறதுதான். எல்லாமே அழகா இருந்துடுங்களா. ஒத்துக் குடித்தனம் பண்ணும்படி சொல்லிட்டுப் போங்க.

[பெண்ணின் தாய்க்கும் தகப்பனுக்கும் எரிகிற கொள்ளியை ஏறத் தள்ளியதுபோல் இருந்தது. அடுத்த தெருவை நோக்கிச் செல்லுகிறார்கள்.]

## காட்சி-8

### [உங்கள் பெண் அழகாயிருக்குமா?]

[ஊர் நாட்டாண்மைக்காரர், ஊரார் பலருடன் தம் வீட்டுக் கூடத்தில் இருந்துகொண்டு, சிக்கண்ணனையும் பெண்ணின் தகப்பனையும் கேள்வி கேட்கிறார்.]

நாட்டாண்மை: ஏனையா, பெண்ணைப் பெற்ற வரே! நீர் என்ன சொல்லுகிறீர்?

பெண் தகப்: ஏம் பொண்ணுக்கு இவுரு ஏற்பாடு பண்ணன மாப்பிளே ஒத்து வரலே. அதே பந்தல்லே இவுரு வேறே மாப்பிளே கொண்டாந்தாரு கொரங்குங்க.

சிக்க: (இடையில்) அதோட, நிறுத்து (நாட்டாண் மைக் காரரை நோக்கி) இவுரு பொண்ணு மட்டும் ரொம்ப அழகோண்ணு கேளுங்க. வா, இந்த நாயத்தே நாட்டாண் மைக்காரரிடம் சொல்லிப் பாப்போம் இண்ணு நாந்தான் கூப்பிட்டேனுங்க. இருக்கட்டும். மாப்பிளே எப்படி இருந் தாதான் என்ன! அப்படி ஒண்ணும் அழகிலே கொறைச்சல் இல்லிங்க. நீங்க பெரியவங்க, ஒரு குடும்பத்தே கலைக்கவா பாப்பிங்க. பொண்ணே ஒத்துக் குடுத்தனம் பண்ணச் சொல்லும்படி செய்யுங்க.

நாட்: ஆமாம் ஐயா! எல்லாரும் அழகுடையவர் களாக இருந்து விடுவார்களா?

பெண் தகப்: ஐயையோ, சுத்த குரங்குங்க.

நாட்: ஆமாம் ஐயா! எல்லாரும் அழகுடையவர் களாக இருந்து விடுவார்களா?

பெண் தகப்: ஐயையோ, சுத்த குரங்குங்க.

நாட்: சரிதான், போய் வாருங்க. குலத்லே குரங் கைக் கொள் என்ற பழமொழி கேட்டதில்லையா நீர்! பைத் தியக்காரரே! போம், போம்!

பெண் தகப்: ஐயையோ, (தலையில் அடித்துக் கொண்டு வெளியில் ஓடுகிறான்.)

## காட்சி-9

### [என் மானத்தைக் கெடுக்காதே]

*[தெருத்தோறும் பெண்ணின் தகப்பனும் தாயும் கூச்சலிட்டுக் கதறிக்கொண்டு ஓடுகிறார்கள். அவர்களுடன் சிக்கண்ணனும் ஓடுகிறான்.]*

சிக்கண்: என் மானத்தைக் கெடுக்காதே. ஊர்லே ஒலகத்லே அழகு கம்மியாக ஆம்பளை இருக்கிறதில்லையா, இதை ஒரு பேச்சா அல்லாரிடத்லியும் சொல்லித் திரியிறிங்களே? (தெருவிலே நடப்பவர்களைப் பார்த்து) ஐயா! இந்த சேதியை கொஞ்சம் கேளுங்க. எம் பையனுக்கும் இவுங்க பொண்ணுக்கும் கண்ணாலம் நடந்தது. ஏதோ பையன் கொஞ்சம் கண்ணுக்குப் புடிக்கலயாம்! அதுக்காக அவனெ என்னாண்ணு திட்டறது?

பெண் தகப்: ஐயா! கொரங்குகிட்ட தாலியெ கட்டச் சொல்லிட்டாங்க ஐயா. இந்த ஊர்லே கேக்றவங்க இல்லியா. என்ன அநியாயம் (அழுகிறான்)

வழிப்போக்கர்கள்: என்னாங்காணும் ஒமக்குப் பைத்யமா! ஆம்பிளைக்கு அழகு ஏங்காணும். ஆம்பிளே சிங்கங்காணும்.

*[என்று கூறிப் போகிறார்கள்.]*

## காட்சி-10

*[பெண்ணின் தகப்பனும் தாயும், நல்ல வகையாக உண்மை அறிந்து தீர்ப்பளிப்பவர்களைத் தேடிக் கொண்டே போகிறார்கள்.]*